# குடும்ப வரவுசெலவுத் திட்டங்கள்

## உங்கள் பணத்தை நிர்வகித்தல் மெய்த்தகவல் தாள்



## வரவுசெலவுத் திட்டம் என்றால் என்ன?

வரவுசெலவுத் திட்டம் என்பது எவ்வளவு பணம் உங்களுக்கு வருகிறதென்பதையும், அதில் நீங்கள் எவ்வளவு செலவு செய்ய வேண்டியதிருக்கும் என்பதை அறிய உதவும் ஒரு திட்ட வரைவாகும். அது நீங்கள் என்ன செலவழித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதைக் கண்காணிக்க உதவும்.

## வரவுசெலவுத் திட்டத்தில் என்ன உள்ளது?

- உங்கள் வருமானம் - எவ்வளவு பணம் உங்களுக்கு வருகிறது மற்றும் அது எங்கிருந்து வருகிறது (எடுத்துக்காட்டாக, சம்பளம் அல்லது சென்டர்லிங்கிடமிருந்து
- உங்கள் செலவுகள் - எவ்வளவு பணம் நீங்கள் செலவழிக்கிறீர்கள் மற்றும் பணத்தை எதில் செலவழிக்கிறீர்கள் (எடுத்துக்காட்டாக, பில்களில், உணவில் மற்றும் பள்ளிக் கட்டணத்தில்)

## வரவுசெலவுத் திட்டமிடுவது என்றால் நீங்கள்:

- உங்கள் பணம் எங்கே செல்கிறது என்பதை தொடர்ந்து கண்காணிப்பது
- உணவு மற்றும் உங்கள் தற்போதைய பில்கள் போன்ற உங்களுக்குத் தேவையான பொருட்களுக்கு பணம் செலுத்துவது
- அவசரத்துக்கும், திட்டமிடப்படாத செலவுகளுக்கும் தயாராக இருப்பது
- சிறப்புக் காரியங்களுக்காகச் சேமிப்பது
- உங்கள் பணத்தை எப்படிச் செலவழிப்பது என்பதை குடும்பத்துடன் சேர்ந்து முடிவு செய்வது

## நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்

- வரவுசெலவுத் திட்டம் என்பது எவ்வளவு பணம் உங்களுக்கு வருகிறதென்பதையும், அதில் நீங்கள் என்ன செலவு செய்ய வேண்டியதிருக்கும் என்பதை அறிய உதவும் ஒரு திட்ட வரைவாகும்.
- வரவுசெலவுத் திட்டம் நீங்கள் என்ன செலவழித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதைக் கண்காணிக்க உதவும்.
- ஒரு வரவுசெலவுத் திட்டம் செயல்பட வேண்டுமென்றால் நீங்கள் அதைப் பின்பற்ற வேண்டும்.

## உதவி மற்றும் மேலதிகத் தகவல்களை எங்கே பெறலாம்

உங்களுக்கு பணப்பிரச்சினைகள் இருந்தால், இலவச நிதி ஆலோசகரை 1800 007 007 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள்.

நிதி ஆலோசகர்கள் பற்றிய மேலதிக விவரங்களுக்கு அல்லது இணைய வரவுசெலவுத் திட்டக்குறிப்பை நிரப்புவதற்கு MoneySmart இணையதளமான **www.moneysmart.gov.au** என்ற முகவரிக்குச் செல்லுங்கள் அல்லது சென்டர்லிங்க் நிதித் தகவல் சேவை அலுவலரை 13 23 00 என்ற எண்ணில் அழைத்து உங்கள் வரவுசெலவுத் திட்டத்தைத் திட்டமிட உதவி பெறுங்கள்.

MONEYSMART

### வரவுசெலவுத் திட்டத்தை உங்களுக்காகச் செயல்பட வைப்பதற்கு

ஆடெம் மற்றும் ஆரோப் பல்பொருள் அங்காடியில் சாமான்கள் வாங்கும்போது வரவுசெலவுத் திட்டம் என்று எதுவும் கிடையாது. அவர்கள் என்ன தேவைப்படும் என்பதை சாமான்கள் பட்டியலில் எழுதி பல்பொருள் அங்காடிக்கு வந்தபின் என்ன வாங்க வேண்டும் என்பதில் உடனே அவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்படுகிறது. ஆரோப் பட்டியலில் உள்ள சாமான்களை மட்டும் வாங்க விரும்புகிறார். ஆனால் ஆடெம் கூடுதல் உணவுப்பொருட்களும், சில சமயங்களில் விருந்து உபசாரம் போன்ற சில தேவையில்லாத பொருட்களையும் வாங்க விரும்புகிறார்.

ஒருநாள் சாமான்கள் வாங்கக் கடைக்குச் செல்லும்போது, ஆடெம் பட்டியலில் இல்லாத சில கூடுதல் சாமான்கள் தள்ளுபடி விற்பனையில் கிடைப்பதால், அவற்றை எடுத்துத் தள்ளுவண்டியில் வைக்கின்றார். அவர்கள் அதற்கும் பணம் செலுத்தும்போது மொத்தத் தொகை 70 டாலர்கள் ஆகியது. ஆரோப் 30 டாலர்கள் மட்டுமே வைத்துள்ளார். அதனால் அவர் தர்மசங்கடத்துக்குள்ளாவதுடன், கூடுதல் சாமான்களுக்குப் பணம் தர முடியாததால் அவைகளைப் பல்பொருள் அங்காடியிலேயே வைத்துவிட வேண்டியதாயிற்று.

கருத்துக்களை ஆலோசனைகள் செய்தபின், ஆடெமும், ஆரோபும் பல்பொருள் அங்காடியில் ஒரு வாரத்துக்கு எவ்வளவுதான் செலவு செய்ய முடியும் என்பதை அறிந்துகொள்ள ஒரு வரவுசெலவுத் திட்டத்தைத் தயார் செய்யவேண்டுமென முடிவு செய்தார்கள். அந்த வரவுசெலவுத் திட்டத்தைப் பின்பற்றவும் முடிவுசெய்தார்கள். அதைப் பின்பற்றிய பின் உணவுக்காக கடைக்குச் செல்லும்போது, வாங்க முடியும் அளவுக்கு மேல் அதிகமாகத் தள்ளுவண்டியில் வைத்து அதனால் தர்மசங்கடமான நிலைக்கு அதன்பின் ஒருபோதும் ஆனதில்லை.

© ASIC 2012 அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

This page has been intentionally left blank.

© ASIC 2012 அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை